RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்-45 | 16 பிப்ரவரி | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## “மத்திய அரசு நிதியை விடுவிக்க வலியுறுத்தப்படும்” திஷா குழு கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை, பிப்.16

“மத்திய அரசின் அனைத்து திட்டங்களும் கடைக்கோடிப் பயனாளிகளுக்கும் சென்று சேர்வதில் திராவிட மாடல் அரசின் பங்கை நாம் உணர்ந்திருக்கிறோம். அதனால்தான் மாநில அரசின் பங்குத் தொகையினை காலதாமதமில்லாமல் விடுவிக்கின்றோம். ஆனால், மத்திய அரசின் நிதி கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதனால், திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு சென்றடைவதில் தாமதமாகிறது. உடனடியாக, நிதியை விடுவிக்க வலியுறுத்தப்படும்,” என்று மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் (திஷா ஞிமிஷிபிகி) பேசிய முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் (ஞிமிஷிபிகி) குழுவின் மாநில அளவிலான நான்காவது ஆய்வுக் கூட்டம் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று (பிப்.15) தலைமைச் செயலகத்தில், நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கடந்த கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.செங்கோட்டையன் கேட்டுக் கொண்டதின்படி, தேங்காய் விவசாயிகளுக்கு மிக விரைவாக பணப்பட்டுவாடா செய்திட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன் றிவிகிசீநி திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு அலகு தொகையை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார். இது தொடர்பான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுப்புராமன் (ஷிசிளிறிணி) கோரிக்கையை ஏற்று குழந்தைகளுக்கு கட்டப்படும் அங்கன்வாடி கழிப்பறைகளுக்கான மதிப்பீடுத் தொகை 202526 நிதியாண்டிலிருந்து 30 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை தொடக்கத்திலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கூட்டத்தில், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டம், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம், துளிநீர் அதிக பயிர், பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா, மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை போன்ற திட்டங்களின் செயல்பாடுகள் இந்தக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு திட்டம் குறித்தும் முக்கியமான சில தகவல்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தினை செயல்படுத்துவதைப் பொறுத்தவரை தமிழகம், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்தத் திட்டத்தின் நான்காவதுகட்ட செயல்பாட்டை 2011ம் ஆண்டு மக்கள் தொகையினை அடிப்படையாகக் கொண்டு 500க்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட, இதுவரை இணைப்புச் சாலை வசதி இல்லாத குக்கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

இப்படியான 7 கிராமங்கள்தான் தமிழகத்தில் இருக்கின்றன. வனப்பாதுகாப்பு சட்டத்தின்படி அனுமதி பெற்ற பிறகுதான் அங்கே இணைப்புச் சாலை வசதி ஏற்படுத்த முடியும். அதனால், ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்படுத்த மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும். இந்தக் குழு உறுப்பினர்களின் ஆலோசனைகளுடன் மீண்டும் மத்திய அரசுக்கு இதுகுறித்து வலியுறுத்தப்படும்.

பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டத்தினைப் பொறுத்தவரை ஒரு வீட்டுக்கான அலகுத் தொகை 1,20,000 ரூபாய் ஆகும். இதில், மத்திய அரசு



72,000 ரூபாயும், மாநில அரசு 48,000 ரூபாயும் வழங்கி வரும் நிலையில், மாநில அரசு கூடுதலாக 1 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை மேற்கூரை அமைப்பதற்காக வழங்கி வருகிறது. 20212022 ஆண்டு வரை 3,61,591 வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு இதுவரை, 3,43,958 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகளை கட்டும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

பிரதம மந்திரி ஊரக குடியிருப்பு திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீட்டுக்கான கட்டுமானப் பொருட்களின் விலை மற்றும் தொழிலாளர்களின் கூலி ஆகியவை கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது. அதனால், நான் தொடக்கத்திலேயே தெரிவித்தபடி, அலகு தொகையினை குறைந்தபட்சம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று மத்திய அரசிடம் கேட்டுள்ளோம். ஆனால், இதுவரை எந்த பதிலும் வரவில்லை. இந்தக் குழு மூலமாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மீண்டும் மத்திய அரசை வலியுறுத்துவோம்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தினை செயற்படுத்துவதில் திராவிட மாடல் தமிழக அரசு எப்போதுமே முன்னோடியாக இருந்து வருகிறது. 2023 24ஆம் ஆண்டில் தேசிய சராசரியான 52 நாட்களைவிட அதிகமாக 59 நாட்கள் வேலை வழங்கியிருக்கிறோம் நவம்பர் மாதம் வரை தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டு அதற்குப் பின்னால், மத்திய அரசால் ஊதியம் வழங்கப்படாமல் இருக்கிறது.

இதுதொடர்பாக, பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன். மத்திய அமைச்சர்கள் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரையும் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் சந்தித்து ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக விடுவிக்க கோரிக்கை வைத்துள்ளார்கள். ஆனாலும், இதுவரை நிதி வரவில்லை. ஊதிய நிலுவைத் தொகையாக 2,118 கோடி ரூபாய் வரவேண்டியுள்ளது. இது தொடர்பாக இதற்கும் இக்குழு மூலமாக தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசை மீண்டும் வலியுறுத்துவோம்.

அடுத்ததாக, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ், 202324ஆம் ஆண்டில் 1,29,020 ஹெக்டேர் நிலப்பரப்பில் நுண்ணீர்ப் பாசன அமைப்புக்காக 109.90 லட்சம் ரூபாய் மானியம் வழங்கி 105 விழுக்காடு சாதனை படைத்திருக்கிறோம். நடப்பாண்டில், 202425 ஜனவரி மாதம் வரை 76,733 ஹெக்டேர் நிலப்பரப்பில் நுண்ணுயிர் பாசன அமைப்புக்காக 66.84 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்கீழ், உழவர்கள் அதிகப் பங்குத் தொகை செலுத்த வேண்டியிருக்கிறது. அதனால், உச்சகட்ட நிலவரம்பான 5 ஹெக்டர் என்பதனை தளர்த்த மத்திய அரசினை வலியுறுத்த நான் உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன்.

ஏழை கர்ப்பிணித் தாய்மார்களுக்கு பேறுகாலத்தில் சத்தான உணவுக்கு ஆகும் செலவை மேற்கொள்ள நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டத்தின்கீழ் 5000 ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 2023 24ஆம் ஆண்டில் 1,51,674 கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.45.52 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. நடப்பாண்டில், முதல் மகப்பேறு மற்றும் இரண்டாவது பெண் குழந்தை பெறும் தாய்மார்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் திட்டத்தின்கீழ், மாற்றுத்திறனாளிகள் என்பதற்கான மருத்துவச் சான்றிதழினை பெறுவதற்கும், அரசின் நலத்திட்டங்களை அவர்களுக்கு எளிதாகக் கொண்டு செல்லவும் இந்தியா முழுமையம் செல்லுபடியாககூடிய தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் நோக்கில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் முதன்மை மருத்துவ அலுவலர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

சமூக தரவுகள் பதிவுகளில் ஏற்கெனவே மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை பெறப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் தரவுகளில் பதிவேற்றம் செய்யப்பட்டவர்கள் கி பிரிவிலும், மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை பெறப்பட்டு, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் தரவுகளில் பதிவேற்றம் செய்யப்படாதவர்கள் ஙி பிரிவிலும், எந்தச் சான்றிதழ்களும் இல்லாமல் மாற்றுத்திறனாளிகள் என கணிக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் தரவுகளில் பதிவேற்றம் செய்ய வேண்டிய நபர்கள் சி பிரிவிலும் பதியப்பட்டுள்ளனர். மேலும் 87,008 நபர்கள் “சி பிரிவு மாற்றுத்திறனாளிகள்” என கணிக்கப்பட்டு, கண்டறியப்பட்டனர்.

இப்படி அனைத்து மாவட்டங்களிலும் கண்டறியப்பட்ட சிபிரிவு மாற்றுத்திறனாளிகளுக்கு 1,238க்கும் அதிகமான ஹிஞ்மிஞ் முகாம்கள் நடத்தப்பட்டு 51,296 மாற்றுத்திறனாளிகளுக்கு ஹிஞ்மிஞ் இணையதளம் வாயிலாக உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. நான் இதுவரை தெரிவித்த தகவல்களிலிருந்து ஒன்று புரிந்திருக்கும். மாநில அரசின் திட்டம், மத்திய அரசின் திட்டம், முந்தைய அரசின் திட்டம், இந்த அரசின் திட்டம் என்ற எந்தப் பாகுபாடும் இல்லாமல் நாம் செயல்பட்டு வருகிறோம் என்பது புரிந்திருக்கும்.

மத்திய அரசின் அனைத்து திட்டங்களும் கடைக்கோடிப் பயனாளிகளுக்கும் சென்று சேர்வதில் திராவிட மாடல் அரசின் பங்கை நாம் உணர்ந்திருக்கிறோம். அதனால்தான் மாநில அரசின் பங்குத் தொகையினை காலதாமதமில்லாமல் விடுவிக்கின்றோம்.

ஆனால், மத்திய அரசின் நிதி கிடைப்பதில் காலதாமதம் ஏற்படுவதனால், திட்டங்களின் பயன்கள் மக்களுக்கு சென்றடைவதில் தாமதமாகிறது. உடனடியாக, நிதியை விடுவிக்க இந்த குழு மூலமாக வலியுறுத்தப்படுமென்று உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்,” என்று முதல்வர் பேசினார்.

## “இந்திய ராஜதந்திரத்துக்கு இது ஒரு சோதனை!” ‘கைவிலங்கு’ விவகாரத்தில் ப.சிதம்பரம் கருத்து

புதுடெல்லி, பிப்.16

“அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்டு இன்று இந்தியாவுக்கு வர இருப்பவர்களின் கைகள் விலங்கிடப்பட்டும், கால்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டும் இருக்குமா? இது இந்திய ராஜதந்திரத்துக்கு ஒரு சோதனை” என்று முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ப.சிதம்பரம் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “சட்டவிரோதமாக குடியேறியவர்களை திரும்ப அழைத்து வரும் 2வது அமெரிக்க விமானத்தின் மீதே அனைவரின் பார்வையும் இருக்கும். நாடு கடத்தப்பட்டவர்கள், கைவிலங்கிடப்பட்டு, அவர்களின் கால்கள் சங்கிலிகளால் கட்டப்படுமா? இது இந்திய ராஜதந்திரத்துக்கு ஒரு சோதனை,” என்று குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவில் உரிய ஆவணங்கள் இன்றி தங்கியிருந்த 119 இந்தியர்கள்



விமானப்படைக்கு சொந்தமான 2 விமானங்களில் நாடு கடத்தப்படுகின்றனர். இந்த 2 விமானங்கள் 119 இந்தியர்களையும் ஏற்றிக்கொண்டு இன்று இரவு பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸில் உள்ள குரு ராம் தாஸ் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படுபவர்களில் அதிகபட்சமாக 67 பேர் பஞ்சாப் மாநிலத்தை சேர்ந்தவர்கள். இதனைத் தொடர்ந்து ஹரியாணா (33), குஜராத் (8), உத்தர பிரதேசம் (3), மகாராஷ்டிரா (2), கோவா (2), ராஜஸ்தான் (2) இமாச்சல் மறறும ஜம்முகாஷ்மீர் (தலா ஒருவர்) ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் அமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.


முன்னதாக, 104 இந்தியர்கள் அடங்கிய முதல் குழு, அமெரிக்காவில் இருந்து கடந்த 5ம் தேதி அமிர்தசரஸ் நகருக்கு வந்தது. அவர்கள் கைவிலகிடப்பட்டும், கால்களில் சங்கிலியால் கட்டப்பட்டும் கொண்டுவரப்பட்டனர். இது தேசிய அளவில் மிகப் பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. இந்நிலையில், பிரதமர் மோடி தனது அமெரிக்க அரசுமுறைப் பயணத்தை நிறைவு செய்ததன் பின்னணியில் இன்று இரண்டாவது குழு வர உள்ளதால் அவர்கள் எவ்வாறு அழைத்து வரப்படுவார்கள் என்ற கேள்வி முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## கேஜ்ரிவாலின் ‘கண்ணாடி மாளிகை’ குறித்த விசாரணைக்கு மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் உத்தரவு: பாஜக

புதுடெல்லி, பிப்.16

டெல்லி முதல்வராக கேஜ்ரிவால் வசித்து வந்த அரசு பங்களாவை அலங்கரிக்க செலவிட்ட தொகை தொடர்பாக விசாரணை நடத்த மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் டெல்லி அரசின் பொதுப்பணித் துறைக்கு உத்தரவிட்டுள்ளதாக பாஜக தலைவர் விஜேந்தர் குப்தா தெரிவித்தார்.

டெல்லி முதல்வராக இருந்த அரவிந்த் கேஜ்ரிவால் 2015 முதல் கடந்த ஆண்டு அக்டோபர் முதல் வாரம் வரை வசித்து வந்த அரசு பங்களாவில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு அது ‘கண்ணாடி மாளிகை’ போல மாற்றப்பட்டதாகவும் இதற்காக அருகில் இருந்த நிலங்கள் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டதோடு, அதன் உள்புற அலங்காரத்துக்காக மக்களின் வரிப்பணம் கோடிக்கணக்கில் செலவிடப்பட்டதாகவும் பாஜக குற்றம் சாட்டி வருகிறது. தேர்தல் நேரத்தில், பிரதமர்



நரேந்திர மோடியும் இத்தகைய குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக இன்று (பிப். 15) பேசிய பாஜக தலைவர் விஜேந்தர் குப்தா, “கேஜ்ரிவால் வசித்து வந்த எண்.6, ஃபிளாக்ஸ்டாஃப் சாலை பங்களாவை விரிவுபடுத்துவதற்காகவும் அலங்கரிப்பதற்காகவும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் விதிமீறல்கள் மற்றும் ஊழல் நடந்துள்ளதாக நான் மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்திடம் ஏற்கனவே புகார்கள் அளித்திருந்தேன். அந்த புகார்கள் தொடர்பாக அறிக்கை தாக்கல் செய்ய மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், டெல்லி அரசின் பொதுப்பணித் துறைக்கு உத்தரவிட்டது. தற்போது அந்த அறிக்கையின் அடிப்படையில், விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது.” என தெரிவித்தார்.

டெல்லி ரோஹினி தொகுதியில் இருந்து புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட பாஜக எம்எல்ஏவான விஜேந்தர் குப்தா, மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையத்திடம் அளித்த முதல் புகாரில், “8 ஏக்கர் பரப்பளவில் ஆடம்பரமான மாளிகையை கட்டுவதற்காக கேஜ்ரிவால் கட்டிட விதிகளை மீறி உள்ளார். ராஜ்பூர் சாலையில் உள்ள பிளாட் எண்கள் 45, 47 மற்றும் இரண்டு பங்களாக்கள் (8ஏ மற்றும் 8பி, ஃபிளாக் ஸ்டாஃப் சாலை) உள்ளிட்ட அரசு சொத்துக்கள் இடிக்கப்பட்டு புதிய இல்லத்தில் இணைக்கப்பட்டன. இதில், தரை பரப்பளவு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன. சரியான திட்ட ஒப்புதல்கள் பெறப்படவில்லை.” என்று குற்றம் சாட்டி இருந்தார்.

தனது இரண்டாவது புகாரில், ஃபிளாக் ஸ்டாஃப் சாலையில் உள்ள 6வது பங்களாவின் புதுப்பித்தல் மற்றும் உட்புற அலங்காரத்தில் மிகப்பெரிய நிதி முறைகேடுகள் நடந்துள்ளதாகவும், வரி செலுத்துவோரின் பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப் பட்டதாகவும் குப்தா குற்றம் சாட்டி இருந்தார்.

## மயிலாடுதுறை படுகொலைக்கு செல்வப்பெருந்தகை கண்டனம்

ஸ்ரீபெரும்புதூர், பிப்.16

காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூரில் தமிழக காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்ச்சி இன்று (பிப்.15) நடைபெற்றது. இதில் அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் சூரஜ் ஹெக்டே, தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை ஆகியோர் கலந்துகொண்டு ஸ்ரீபெரும்புதூர் நகர காங்கிரஸ் நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கினார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த செல்வப்பெருந்தகை கூறியது: “மயிலாடுதுறையில் நடந்த இரட்டைக் கொலை



குற்றவாளிகளை போலீஸார் இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும்.

தமிழக முதல்வர் சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வகையில் செயல்படுகிறார். அதிகாரிகளும் முதல்வருக்கு உறுதுணையாக இருந்து கயவர்களை தண்டிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

## ‘பாதுகாப்பற்ற மாடல்’ அரசை நடத்தும் ஸ்டாலின் மயிலாடுதுறை சம்பவத்தில் இபிஎஸ் விமர்சனம்

சென்னை, பிப்.16

“மக்களுக்கு முற்றிலும் பாதுகாப்பற்ற மாடல் அரசை நடத்தும் முதல்வர் ஸ்டாலின், தனது ஆட்சியில் எந்த தவறுமே நடக்காதது போல், போட்டோஷூட், வீடியோஷூட் என வலம் வருவது தமிழ்நாட்டு அரசியலில் புதிய விந்தை” என எதிர்க்கட்சி தலைவர் இபிஎஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், “மயிலாடுதுறை அருகே சாராய விற்பனையைத் தட்டிக் கேட்ட இரண்டு இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக



வந்துள்ள செய்திகள் மிகுந்த அதிர்ச்சி அளிக்கின்றன. எந்த தவறு குறித்து புகார் அளித்தாலும், புகார் அளிப்பவர்கள் மிரட்டப்படுவதும், கொல்லப்படுவதும் என, மக்களுக்கு முற்றிலும் ஹிஸீ உணீயீமீ விஷீபீமீறீ அரசை நடத்தும் திமுக முதல்வர் ஸ்டாலின், தனது ஆட்சியில் எந்த தவறுமே நடக்காதது போல், போட்டோஷூட், வீடியோஷூட் என வலம் வருவது தமிழ்நாட்டு அரசியலில் புதிய விந்தை.

முதல்வர் ஸ்டாலினுக்கு போட்டோஷூட்டுக்கு அரிதாரம் பூசிக்கொள்வதில் இருக்கும் கவனம், தனக்குதானே புகழ்ந்து கொள்ளும் இருக்கும் ஆர்வம், என்றைக்காவது ஆட்சி நடத்துவதில் இருந்தது உண்டா? இதில், இவரின் கட்டுப்பாட்டில் இருக்கும் காவல்துறை, இந்த கொலை வாய்த் தகராறு, முன்விரோதம் காரணமாக நடந்தது என பத்திரிகை செய்தி வெளியிடுகிறது. வழக்கை விசாரிப்பதற்கு முன்னமே காவல்துறையே தீர்ப்பை எழுதுவது தான் ஸ்டாலின் மாடலா?

இளைஞர்கள் கொலையின் காரணத்தை தீர விசாரிப்பதுடன், தொடர்புள்ளோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஸ்டாலின் மாடல் திமுக அரசை வலியுறுத்துகிறேன். விளம்பரங்களில் மட்டும் இருக்கும் கவனத்தை, மக்கள் பணியில் சிறிதாவது செலுத்துமாறு முதல்வரைக் கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை மன்னர் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் புத்தக வாசிப்பால் சிவகங்கை புத்தகத் திருவிழாவை வரவேற்கும் மாணவர்கள்

காளையார் கோவில் பிப்.16

சிவகங்கையில் மன்னர் மேல்நிலைப்பள்ளிவிளையாட்டு மைதானத்தில் 4 ஆவது புத்தகத் திருவிழா பிப்ரவரி 21ஆம் தேதியிலிருந்து மார்ச் 2ஆம் தேதி முடிய 10 நாட்கள் 100க்கும் மேற்பட்ட புத்தக அரங்குகளில் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளது.



அதனை எதிர்நோக்கும் விதமாக காளையார்கோவில் ஒன்றியத்திலுள்ள கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் புத்தக வாசிப்பின் மூலம் சிவகங்கையின் நான்காவது புத்தக திருவிழாவிற்கு பள்ளி மாணவ மாணவிகள் அழைப்பு விடுத்தனர். புத்தக வாசிப்பை தலைமையாசிரியை தெய்வானை தலைமை வகித்து தொடங்கி வைத்தார். ஆசிரியை வாசுகி வரவேற்றார். தான் படித்த புத்தகம் குறித்த கலந்துரையாடல் நடைபெற்றது. புத்தகம் வாசிப்போம் வாசிப்பை நேசிப்போம் என்ற முழக்கத்தோடு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு நான்காவது புத்தக திருவிழாவில் பெற்றோர்கள் மாணவ மாணவிகள் திரளாக கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது. புத்தக வாசிப்பின் மூலம் சிறப்பான கருத்துக்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கு ஆசிரியை கமலம்பாய் புத்தகங்களை பரிசாக வழங்கினார்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி புத்தக வாசிப்பு குறித்து உரையாற்றினார். கணினி பயிற்றுனர் வித்யா நன்றி கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் நேற்றுமுன்தினம் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக்காட்சியின் மூலம் இராமேஸ்வரத்தில் புதிதாக கட்டப்பட்ட பாரத ரத்னா டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியினை திறந்து வைத்ததையொட்டி, மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் குத்துவிளக்கேற்றி வைத்து பார்வையிட்டார். இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் உடன் இருந்தார்.




ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வட்ட சட்டப் பணிகள் குழு சார்பாக இராஜா அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் சட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது போதை ஒழிப்பு , குழந்தைகள் நலச் சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது இதில் வழக்கறிஞர் பிரபு கலந்து கொண்டு சட்ட விளக்கங்கள் கொடுத்தார் காவல்துறை சார்பாக சிறப்பு சாய்பு ஆய்வாளர் பாலகிருஷ்ணன் மற்றும் தலைமையாசிரியர் , ஆசிரியர்கள் கலந்து கொண்டார்கள் விழா ஏற்பாட்டை வட்ட சட்டப் பணிகள் சங்கர் ஒருங்கிணைத்தார்.

## நீலகிரியில் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் கல்வித்திட்டம்




நீலகிரி பிப்16

நீலகிரி மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் கம்பையாடா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயல் எல்லையில் அமைந்துள்ள சோகத்தொரை கிராமத்தில் உறுப்பினர் கல்வித் திட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு நீலகிரி மண்டல இணைப்பதிவாளர் இரா. தயாளன் தலைமையுரை யாற்றினார். தனது தலைமை யுரையில் நீலகிரி மாவட்டத்தில் துவக்கப்பட உள்ள முதல்வர் மருந்தகம் குறித்தும், முதல்வர் மருந்தகத்தில் குறைந்த விலையில் மருந்துகள் வழங்கப்படுகின்றன, அவற்றைப் பெற்று பயனடைய வேண்டும் என்றும், உறுப்பினர் பெற்ற அனைத்துக் கடன்களையும் உரிய காலத்திற்குள் திருப்பி செலுத்த வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். துணைப் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர், நீலகிரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை லிட்., சி. அய்யனார் முன்னிலை உரையாற்றினார். தனது முன்னிலை உரையில் கூட்டுறவு சங்கங்களில் தயாரிப்புகளான மங்கலம் மசாலா பொடிகளையும் ஆரூரான் உளுந்து பருப்பையும் பெற்று பயனடைய வேண்டும் என்றும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் ஆறு ஊர் நல சங்க தலைவர் குமார், துணைத்தலைவர் போஜன், செயலாளர் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்..

## பெரியகுளத்தில் தனியார் பள்ளியில் முப்பெரும் விழா






தாம்பரம் பிப்16

மனிதநேய வணிகர் சங்கம் சார்பாக வணிகர்களை காப் போம் வாழ்வுரிமை பாதுகாப்பு கருத்தரங்கம் கூட்டம் நடை பெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மனிதநேய மக்கள் கட்சியின் மனிதநேய வணிகர் சங்கம் சார்பாக வணிகர்களை காப்போம் வாழ்வுரிமை பாது காப்பு கருத்தரங்கம் பிஆர்சி மஹாலில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஏ.அப்துல் முனாப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது செங்கல்பட்டு வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணைச்செயலாளர் அசன் அலி வரவேற்பு உரையாற்றினார்கள்.

சிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் எம்.யாக்கூப் எம்சி மனிதநேய மக்கள் கட்சியின் மாநில அமைப்பு செயலாளர் புது மடம் அலிம் அவர்கள் கலந்து கொண்டு வணிகர்களிடையே பல்வேறு கருத்துகளை தெரிவித்து வியாபாரிகளின் பிரச்சனைகளையும் தீர்வு களையும் பற்றி எடுத்துரைத் தார்கள்.

வர்த்தக அணி மாநில செயலாளர் ஏ.கௌஸ் பாஷா அவர்கள் தொகுப்புரை வழங்கினார்கள். திராவிடர் கழகத்தின் தாம்பரம் மாவட்ட தலைவர் ப.முத்தையன், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே. ஜாகிர் உசேன், தலைமை கழக பேச்சாளர் காஞ்சி மாவட்ட தலைவர் ஜே.சலீம் கான், மனிதநேய மக்கள் கட்சி மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ்.தமிம் அன்சாரி, மமக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபூர் ரகுமான், மாநில தொழிற்சங்க அணி பொருளாளர் ஏ.ஆஷிக் ஹமீது, தாம்பரம் பெருநகர அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் காஜாமைதீன், பொருளாளர் பி.டிட்டோ ராஜ், பகுதி வர்த்தக அணி பொருளாளர் எஸ்.சேக் தாவூத், துணை செயலாளர் ஏ.முஹம்மது சுலைமான் மற்றும் மாநில மாவட்ட பகுதி வார்டு நிர்வாகிகள் மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள் வியாபாரிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

இறுதியாக தாம்பரம் பகுதி வர்த்தக அணி செயலாளர் எம்எஸ் எச்.அசாருதீன் அவர்கள் நன்றி உரையாற்றினார்கள்.

## சென்னை மாநகராட்சி சோழிங்கநல்லூர் 15வது மண்டல அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம்

சோழிங்கநல்லூர் பிப்.16



சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் ,15 வது மண்டல அலுவலகத்தில் மண்டல குழு தலைவர், சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி செயலாளருமான வி. இ. மதியழகன் தலைமையில் அருஞ்சுவை விருந்துடன் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் தங்களின் கோரிக்கைகளை விரைந்து முடித்து தருமாறு சென்னை மாநகராட்சி அலுவலர்களிடம் கேட்டபோது நடந்து கொண்டிருக்கும் பணிகளின் விபரத்தை பட்டியலுடன் எடுத்துரைத்தனர். உடன் மண்டல ஆணையர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் இயங்கி வரும் பிரபல ஹைதராபாத் பிரியாணி ஹவுஸ் உணவகத்திற்கு உணவு கட்டுப்பாட்டு துறையினர் சீல் வைத்தனர். ஹைதராபாத்பி ரியாணிஹவுஸ் உணவகத்தில் சோதனைவிட்டதில் இந்த உணவகத்தில் கெட்டுப்போன இறைச்சி சமைப்பதற்காக இருந்ததை பார்வையிட்ட உணவு கட்டுப்பாட்டு துறையினர். அந்த உணவகத்திற்கு நோட்டீஸ் வழங்கி சீல் வைத்தனர்.

இதில் உணவு கட்டுப்பாட்டு துறை மாவட்ட அதிகாரி சுரேஷ் மற்றும் நந்தகுமார் அடங்கிய இரண்டு குழுவினர் குன்னூர் பகுதியில் உணவகங்கள் மற்றும் டீக்கடையில் தீவிர சோதனை நடத்தினர்.

## மனிதநேய வணிகர் சங்கம் சார்பாக வணிகர்களை காப்போம் வாழ்வுரிமை பாதுகாப்பு கருத்தரங்கம் கூட்டம்

தாம்பரம் பிப்16




மனிதநேய வணிகர் சங்கம் சார்பாக வணிகர்களை காப்போம் வாழ்வுரிமை பாதுகாப்பு கருத்தரங்கம் கூட்டம் நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மனிதநேய மக்கள் கட்சியின் மனிதநேய வணிகர் சங்கம் சார்பாக வணிகர்களை காப்போம் வாழ்வுரிமை பாதுகாப்பு கருத்தரங்கம் பிஆர்சி மஹாலில் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட வர்த்தக அணி செயலாளர் ஏ.அப்துல் முனாப் அவர்கள் தலைமையில் நடைபெற்றது செங்கல்பட்டு வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணைச்செயலாளர் அசன் அலி வரவேற்பு உரையாற்றினார்கள்.

சிறப்பு அழைப்பாளராக மனிதநேய மக்கள் கட்சி மாநில துணை பொதுச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் எம்.யாக்கூப் எம்சி மனிதநேய மக்கள் கட்சியின் மாநில அமைப்பு செயலாளர் புது மடம் அலிம் அவர்கள் கலந்து கொண்டு வணிகர்களிடையே பல்வேறு கருத்துகளை தெரிவித்து வியாபாரிகளின் பிரச்சனைகளையும் தீர்வு களையும் பற்றி எடுத்துரைத் தார்கள்.

வர்த்தக அணி மாநில செயலாளர் ஏ.கௌஸ் பாஷா அவர்கள் தொகுப்புரை வழங்கினார்கள்.

திராவிடர் கழகத்தின் தாம்பரம் மாவட்ட தலைவர் ப.முத்தையன், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாகிர் உசேன், தலைமை கழக பேச்சாளர் காஞ்சி மாவட்ட தலைவர் ஜே.சலீம் கான், மனிதநேய மக்கள் கட்சி மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ்.தமிம் அன்சாரி, மமக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபூர் ரகுமான், மாநில தொழிற்சங்க அணி பொருளாளர் ஏ.ஆஷிக் ஹமீது, தாம்பரம் பெருநகர அனைத்து வியாபாரிகள் சங்க தலைவர் காஜாமைதீன், பொருளாளர் பி.டிட்டோ ராஜ், பகுதி வர்த்தக அணி பொருளாளர் எஸ்.சேக் தாவூத், துணை செயலாளர் ஏ.முஹம்மது சுலைமான் மற்றும் மாநில மாவட்ட பகுதி வார்டு நிர்வாகிகள் மற்றும் வணிகர் சங்க நிர்வாகிகள் வியாபாரிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தார்கள்.

இறுதியாக தாம்பரம் பகுதி வர்த்தக அணி செயலாளர் எம்எஸ் எச்.அசாருதீன் அவர்கள் நன்றி உரையாற்றினார்கள்.



சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி, மருத்துவமனை மாணவர்கள் விடுதி , அலுவலகம் மற்றும் மருத்துவமனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிகமாக இருக்கும் செடி மற்றும் தேவையற்ற பொருட்கள் வண்டுகள்,விஷஜந்து மற்றும் பாம்புகளால் தொல்லைகள் ஏற்பட்டு வந்தது இந்நிலையில் இந்தோ திபெத்எல்லை பாதுகாப்பு படையினர் மற்றும் அம்மையப்பர் கார்மெண்ட்ஸ் நிறுவனத்தார்,அரசு மருத்துவக் கல்லூரி பணியாளர்கள் நேற்று தூய்மை மேற்கொண்டனர்.இந்நிகழ்ச்சியில் மருத்துவக் கல்லூரி கண்காணிப்பாளர் கண்ணன், மகேந்திரன், முகமது ரஃபிக் அலுவலக கண்காணிப்பாளர் ரமேஷ் கண்ணன் இந்தோ தீபக் கமாண்டர் சந்திரன் , கிருஷ்ணன் பால் அம்மையப்பர் நிறுவனத்தின் பங்களிப்பான அஜய் கான் , ஜாகிர் உசேன், மதிக்குமார் மற்றும் இந்து தீபத் 495 கமாண்டர் குழுவினர் பங்கு பெற்று அப்பகுதியை சுத்தம் செய்தனர்

# வாடிப்பட்டியில் ஜாக்டோ ஜியோ கண்டன ஆர்ப்பாட்டம்




வாடிப்பட்டி, பிப்.16

மதுரை மாவட்டம வாடிப்பட்டி வட்டா ர ஜாக்டோ ஜியோ அமைப் புகள் சார்பாக வாடிப்பட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலக முன்பு பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல்படுத் த கோரியும், இடை நிலை முதுக லை மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஊதிய முரண்பாடு களை களைய கோரியும், அரசா ணை 243 ரத்து செய்ய கோரியும், படித்த இளைஞர்களுக்கு முறை யான நியமனத்தில் வேலை வாய்ப்பை வழங்க கோரியும் உள்ளிட்ட பத்து அம்ச கோரிக்கை களை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர்பாரதி சிங்கம் தலைமை தாங்கினார். அரசு ஊழியர் சங்கம்மாவட்ட துணைத் தலைவர் மகேந்திரன், தமிழ்நாடு முதுகலை பட்டாதாரி ஆசிரியர் சங்கம் மேலூர் கல்வி மாவட்ட செயலாளர் முருகன், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக பொறுப்பாளர், கிரேஸி ஆகியோர்கோரிக்கை விளக்கவுரையும், தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் சங்க பொறுப்பாளர் சந்திரன் சிறப்புரை ஆற்றினார். இதில் ஜாக்டோ ஜியோ அமைப்பைச் சேர்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் ஒருங்கிணைப்பாளர் ஜோயல் ராஜ் நன்றி கூறினார்.




தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே ராஜதானி பகுதியில் உள்ள அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 2 கோடியை 1 லட்சம் மதிப்பீட்டில் ஐந்து புதிய வகுப்பறை மற்றும் அறிவியல் ஆய்வுக் கூட கட்டிடங்களை தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராசன் அவர்கள் இணைந்து குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்து பார்வையிட்டனர் உடன் திமுக கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சாம்பவர்வடகரை அரசு மேல்நிலை பள்ளியில் ஆண்டு விழா 100% தேர்ச்சி கொடுத்த ஆசிரியர்களுக்கு பாராட்டு

தென்காசி, பிப் : 16

தென்காசி மாவட்டம் சாம்பவர்வடகரை அரசு மேல்நிலை பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது.




ஆண்டு விழாவிற்கு தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரெஜினி தலைமை வகித்தார். மாவட்ட கல்வி அலுவலர்கள் அமலாதங்கத்தாய், ஜெயபிரகாஷ்ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியர் பிரபாவதி ஆண்டறிக்கை வாசித்தார்.

விழாவில் பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் சண்முகவேல், துணைத் தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழாவில் கடந்த ஆண்டு 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு தேர்வில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கும், பள்ளியில் சிறப்பாக பணியாற்றிய ஆசிரிய ஆசிரியைகளுக்கும் பரிசுகள் மற்றும் சான்றுகளை தென்காசி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ரெஜினி பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றி பேசினார்.

மேலும் விழாவில் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் அனைவரையும் கவரும் வகையில் அமைந்தது. சாம்பவர்வடகரையில் உள்ள அரசுமேல்நிலைப்பள்ளிகடந்த ஆண்டு 10ம் வகுப்பு தேர்வில் 92% தேர்ச்சியும் ப்ளஸ் 2 தேர்வில் 96% தேர்ச்சியும் பெற்ற அரசு பள்ளி இந்த ஆண்டு 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 100% வெற்றி பெறம் இலக்கை நோக்கி செல்வதாக பள்ளி தலைமை ஆசிரியர் தெரிவித்தார்.

இந்த பள்ளியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையில் 600 மாணவர்களும், 680 மாணவிகளும் என மொத்தம் 1280 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். விழாவின் முடிவில் பள்ளி முதுகலை ஆசிரியர் ராமையா நன்றி கூறினார்.









தமிழ்நாடு முதலமைச்சர் தலைமைச் செயலகத்திலிருந்து பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை சார்பில் தேனி மாவட்டம் வெள்ளையம்மாள்புரம் மற்றும் இராஜதானி அரசு கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 3.11 கோடி மதிப்பீட்டில் புதியதாகறை கட்டிடங்களை மற்றும் அறிவியல் ஆய்வக கட்டிடத்தினை காணோளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார் அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் ஆண்டிபட்டி எம் எல் ஏ ஆ மகாராஜன் முன்னிலையில் ராஜாதானி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள வகுப்பறை கட்டிடத்தில் குத்துவிளக்கு ஏற்றி வைத்து பார்வையிட்டார்கள்

# மதுரை மாவட்டம் கள்ளிக்குடியில் அதிமுக சார்பில் திண்ணை பிரச்சாரம்

மதுரை, பிப்.16



மதுரை மாவட்ட செயலாளர்கள் தலைமையில் மதுரை புறநகர் மேற்கு மாவட்ட அம்மா பேரவையின் சார்பில் கள்ளிக்குடியில் திண்ணை பிரச்சாரம் நடைபெற்றது. இந்த திண்ணை பிரச்சாரத்தில் அம்மா பேரவை செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் வீதி, வீதியாக மக்களை சந்தித்து சாதனை விளக்க துண்டுபிரசுரங்களை வழங்கி திண்ணைப் பிரச்சாரத்தை மேற்கொண்டார். இதற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் தமிழழகன் தலைமை தாங்கினார்

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மகேந்திரன், கருப்பையா, மாணிக்கம்,மாநில நிர்வாகிகள் வெற்றிவேல், தனராஜன், ராமகிருஷ்ணன், ஏ கே பி சிவசுப்பிரமணியன், ஜான் மகேந்திரன், மாவட்ட கழக நிர்வாகிகள் சி.முருகன்,வக்கீல் தமிழ்ச்செல்வன், வக்கீல் திருப்பதி, ஒன்றிய கழக செயலாளர்கள் அன்பழகன், கண்ணன், ராமையா, பிரபு சங்கர் ,காளிதாஸ், மாவட்ட அணி நிர்வாகிகள் சிங்க ராஜ பாண்டியன், பேரையூர் ராமகிருஷ்ணன், சரவண பாண்டி, துரைப்பாண்டி மகேந்திர பாண்டி, மற்றும் பாலசுப்ரமணி, சுமதி சாமிநாதன், லதா ஜெகன் , அலங்கை மனோகர் ,ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்.பி.உதயகுமார் பேசியதாவது, கடந்த வாரம் வெள்ளிக்கிழமை கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியாரின்ஆணைக்கணங்க, சென்னை தலைமை கழகத்தில் நடைபெற்ற கழக அம்மா பேரவை ஆலோசனைக் கூட்டத்தில், தமிழகத்தில் புரட்சித்தலைவர், புரட்சித்தலைவி அம்மா ஆகியோரின் புனித அரசை எடப்பாடியாரின்

தலைமையில் அமையும் வகையில், ஒவ்வொரு வாரம் வெள்ளிக்கிழமை தோறும் திண்ணைப் பிரச்சாரத்தை மேற்கொண்டு, அதிமுக அரசின் சாதனை விளக்க துண்டு பிரசுரங்களை திண்ணை பிரச்சாரம் முலம் மக்களை சந்தித்து மேற்கொள்வோம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஸ்டாலின் முகத்தை பார்த்து திமுகவுக்கு செல்வாக்கு அதிகரித்தது என்று கூறுகிறார்கள், இது மக்கள் ஏற்க மாட்டார்கள். ஆனால் நான் சொல்கி றேன் இன்றைக்கு எடப்பாடியார் தலைமையில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 2 சகவீத வாக்குகள் அதிகரித்தது, இன்றைக்கு எடப்பாடியாருக்கு நாளுக்கு நாள் செல்வாக்கு அதிகரித்தது என்பது தான் உண்மை. இன்றைக்கு எல்லா பத்திரிக்கைகளும் அதிமுகவை பற்றி தான் பேசுகிறார்கள், எடப்பாடியாரை பற்றி தான் பேசுகிறார்கள். ஏன் மற்ற கட்சியை பற்றி எழுதவில்லை எழுத மாட்டார்கள் ஏனென்றால் அதிமுக என்பது மக்கள் இயக்கம், மக்கள் நேசிக்கும் இயக்கம் அதிமுகவாகும் என பேசினார்.

# ஒட்டன்சத்திரத்தில் திண்டுக்கல் வடக்கு மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் செயற்குழு கூட்டம்

ஒட்டன்சத்திரம், பிப்.16






திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் தனியார் திருமண மண்டபத்தில் திண்டுக்கல் வடக்கு மாவட்டம் பா.ம.க கட்சி சார்பில் செயற்குழு கூட்டம் திண்டுக்கல் வடக்கு மாவட்ட செயலாளர் வைரமுத்து தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் வைரமுத்து, திண்டுக்கல் வடக்கு மாவட்ட தலைவர் சதீஷ்குமார் உரையாற்றினர். ஒட்டன்சத்திரம் நகரச்செயலாளர் அர்ஜுன் வரவேற்புரையாற்றினார். மேலும் செயற்குழுக் கூட்டத்திற்கு சிறப்பு கருத்துரையாற்ற பாட்டாளி மக்கள் கட்சி மாநில பொதுச் செயலாளர் வடிவேல் ராவணன் பல்வேறு கருத்துக்கள் குறித்து எடுத்துரைத்து பேசினார் மேலும் நகரத் தலைவர் முருகன்,நகர இளைஞரணி செயலாளர் மணிகண்டன்,தொழில் சங்க அணி தலைவர் சிதம்பரம், மேற்கு ஒன்றிய செயலாளர் இளையராஜா, மேலும் ஒட்டன் சத்திரம்,பழனி தொப்பம்பட்டி, கொடைக்கானல், வேடசந்தூர், குஜிலியம்பாறை வடமதுரை, உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய, நகர, நிர்வாகிகளும் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# கூடலூரில் மனிதநேய மக்கள் கட்சி 17ஆம் ஆண்டு துவக்க விழா

கம்பம்,பிப்.16:



தேனி மாவட்டம் கூடலூர் நகர மனிதநேய மக்கள் கட்சி சார்பாக 17ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு மணியளவில் கொடியேற்றுதல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நகர தலைவர் சாகுல் அமீது தலைமை வகித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் அப்பாஸ் மந்திரி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி செயலாளர் நியாஸ் அஹமது, மாவட்ட ஊடக பிரிவு செயலாளர் நவாஸ் கான், நகர தமுமுக செயலாளர் முகமது ரபீக், மமக செயலாளர் ஹைதர் அலி, துணைச் செயலாளர் ராஜா முகமது, அப்பாஸ் மந்திரி, ஐபிபி செயலாளர் அக்பர், கிளை செயலாளர் கண்ணன், நகர இளைஞரணி துணை செயலாளர் நவீன், காந்திகிராமம் கிளை தலைவர் ஷேக் அப்துல்லா, கிளை செயலாளர் அன்சாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

காந்திகிராமத்தில் கொடியை கிளைச் செயலாளர் கண்ணன் ஏற்றி வைத்தார்கள். கர்ணம் பழனிவேல் பிள்ளை தெருவில் உள்ள கொடி கம்பத்தில் நகர தலைவர் சாகுல் அமீது கொடியேற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், மதிய உணவுமற்றும் உடைகள் வழங்கப்பட்டது.



திருப்பூர் மாவட்டம் அவினாசி சந்தைப்பேட்டையில் இலங்கைத்தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாக கட்டப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சி தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி 4வது மண்டல தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வருவாய்கோட்டாச்சியர் மோகனசுந்தரம், அவினாசி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி பொன்னுசாமி ஆகியோர் உள்ளனர்.

மாலை தந்தி





மக்கள் நீதி மையம் தலைவர் கமல்ஹாசன் அவர்களை நெல்லை மத்திய மாவட்ட திமுக துணைச்செயலாளர் எஸ்.வி.சுரேஷ் மரியாதை நிமித்தமாக சந்தித்து தமிழ் பண்பாட்டு ஆய்வறிஞர் பேராசிரியர் தொ.பரமசிவன் எழுதிய நூல்கள் குறித்தும் , வரலாற்று ஆய்வாளர் தமிழ் பேராசிரியர் வே.மாணிக்கம் எழுதிய பாஞ்சாலங்குறிச்சி வீரசக்கதேவி கோயில் வரலாறும் வழிபாடும் என்ற நூலினை வழங்கினார்கள்.

# சொத்துகுவிப்பு வழக்கு முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் விடுதலை

அந்தகிராமம் பிப்.16

2002ம் ஆண்டு அதிமுக ஆட்சியில் திமுக முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜன் மீது சொத்து குவிப்பு தொடரப்பட்டது

சொத்துக்குவிப்பு நடைபெற்று வந்த நிலையில் வழக்கில் இருந்து திமுக முன்னாள் அமைச்சர் சுரேஷ்ராஜனை விடுதலை செய்து கன்னியாகுமரி மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. 1996-2001 ஆண்டுகளில் சுற்றுலா அமைச்சராக இருந்த சுரேஷ் ராஜன் வருமானத்திற்கு அதிகமாக ரூ.17 லட்சம் சொத்து சேர்த்ததாக 2002ல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது




சுரேஷ்ராஜன் விடுதலை: உற்சாகத்தில் திமுக தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தமிழக சட்டமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு 2026 நடைபெறுகிறது.தேர்தலுக்கு திமுக ., அதிமுக, பாஜக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தயாராகி வருகிறது. ஆளும்கட்சியான திமுக., வரும் தேர்தலில் 200 தொகுதியை கைப்பற்ற வியூகம் வகுத்து அதற்கான பணிகள் நடந்து வருகின்றன.இந்நிலையில் திமுக.,வில் செயல்படாத நிர்வாகிகள் மாற்றி புதிய நிர்வாகிகளை நியமிக்கபட்டு வருகின்றனர்.

ஆறு சட்டமன்ற தொகுதிகளை கொண்ட குமரி மாவட்டத்தில் இரண்டு தொகுதிக்கு ஒரு மாவட்ட செயலாளர் நியமிக்கும் திட்டம் திமுக தலைமையிடம் உள்ளது. இந்நிலையில் முன்னாள் மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சுரேஷ் ராஜனுக்கு சொத்து குவிப்பு வழக்கில் இருந்து விடுவித்து வழங்கி நாகர் கோவில் கோர்ட் தீர்ப்பளித்தது. சுரேஷ் ராஜனின் அரசியல் வாழ்க்கையின் முக்கியத்துவம் வாய்ந்த இந்த தீர்ப்பு அவரது ஆதரவாளர்கள் திமுக தொண்டர்கள் மத்தியில் கடும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது. திமுக தலைமையிடம் நெருக்கமாக இருக்கும் சுரேஷ் ராஜனுக்கு குமரி மாவட்ட திமுக.,வில் முக்கிய பொறுப்பு விரைவில் அறிவிக்கப்படலாம் என்றும் அவரது ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பொய்வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜனை திமுக மாநில வர்த்தக அணி இணை செயலாளர் வக்கீல். தாமரைபாரதி மயிலாடி பேரூராட்சிதுணை தலைவர் சாய்ராம், அஞ்சுகிராமம் பேரூராட்சி துணை தலைவர் காந்திராஜ், திமுக நிர்வாகிகள் சுதன் மணி, செல்வின் சதீஷ்குமார்,தென் தாமரைக்குளம் பேரூர் செயலாளர் பூவியூர் காமராஜ், கொட்டாரம் பேரூர் செயலாளர் வைகுண்ட பெருமாள், லீபுரம் ஊராட்சி முன்னாள் தலைவர் முத்துசாமி, திமுக கவுன்சிலர் எட்வின் ராஜ் ,வாத்தியார் செல்வக்குமார், மற்றும் பலர் உள்ளனர்

# நிதி அகர்வால் ஹரி ஹர வீர மல்லு படம்' பற்றிய சுவாரசிய தகவலை பகிர்ந்துள்ளார்



சென்னை பிப்16

தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி மொழித் திரைப்படங்களில் நடித்து வருபவர் நிதி அகர்வால். இவர் தெலுங்கில் 'சவ்யசாச்சி' திரைப்படத்திலும், தமிழில் 'ஈஸ்வரன்' திரைப்படத்திலும் அறிமுகமானார். ஐஸ்மார்ட் ஷங்கர் மற்றும் கலக தலைவன் உள்ளிட்ட திரைப்படங்களிலும் நடித்திருந்தார். தற்போது இவர் பிரபாஸுடன் 'தி ராஜா சாப்' படத்திலும் , பவன் கல்யாணுடன் 'ஹரி ஹர வீரமல்லு' என்ற திரைப்படத்திலும் நடித்து வருகிறார்.இதில், 'ஹரி ஹர வீரமல்லு' படத்தின் டீசர் மற்றும் முதல் பாடல் ஏற்கனவே வெளியான நிலையில், 'எம்மனச பறிச்சுட்ட' என்ற பாடல் வருகிற 24ம் தேதி மதியம் 3.00 மணிக்கு வெளியாக உள்ளது. இந்நிலையில், ஹரி ஹர வீர மல்லு படம் குறித்த சில சுவாரசியமான தகவல்களை நிதி அகர்வால் பகிர்ந்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில் டீசரில் நீங்கள் பார்த்தது ஒரு சிறிய காட்சிதான். படத்தில் நீங்கள் ஆச்சரியப்படும் படியான பல காட்சிகள் உள்ளன. எனது கதாபாத்திரத்திற்கு இப்படத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. பஞ்சமி எனது சிறந்த கதாபாத்திரம், ஹரி ஹர வீர மல்லு எனது சிறந்த படம்' என்று கூறினார்..

# ஒட்டன்சத்திரம் ஒன்றியத்தில் தூய்மை பாரத இயக்கம் சார்பில் விழிப்புணர்வு

ஒட்டன்சத்திரம், பிப்.16

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் தூய்மை பாரத இயக்கம் திடக்கழிவு மேலாண்மை தூய்மை காவலர்கள் தினசரி வீடுவீடாக சென்று குப்பைகளை சேகரிப்பது சம்பந்தமாகவும், பொது மக்களுக்கு மக்கும் குப்பை மக்காத குப்பை என்று தனித்தனியாக பிரித்துக் கொடுப்பதற்கும் எனது குப்பை எனது பொறுப்பு என்பதனை மக்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஒட்டன்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகளில் விழிப்புணர்வு நடத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு அம்பிளிக்கை தங்கச்சியம்மாபட்டி அத்திக்கோம்பை லெக்கையன்கோட்டை உள்ளிட்ட அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வட்டார ஊராட்சி அலுவலர் வடிவேல்முருகன், கிராம ஊராட்சி அலுவலர் காமராஜ், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஈஸ்வரி, சக்திவேல் வட்டார ஒருங்கிணைப்பாளர் கிராம ஊராட்சி செயலர்கள், அம்பிளிக்கை சுப்புராஜ், தங்கச்சியம்மாபட்டி மணிகண்டன், அத்திக்கோம்பை மலர்விழி, லெக்கையன்கோட்டை நல்லையா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.







மதுரையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் மதுரை திண்டுக்கல் தேனி கரூர் ராமநாதபுரம் சிவகங்கை விருதுநகர் திருநெல்வேலி தூத்துக்குடி தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட. மாநகராட்சிகள் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் அமைச்சர் கே என் நேரு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் தலைவர்கள் செயல் அலுவலர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சிவகங்கையில் சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் இணைந்து நடத்தும் 35 வது மாநில அளவிலான சிலம்பம் போட்டிகள்



சிவகங்கை பிப்.16

சிவகங்கை நகராட்சி ஆர் எம் ஆர் திருமண மண்டபத்தில் சிவகங்கை சிவம் மார்சில் ஆர்ட்ஸ், நேரு யுவகேந்திரா மற்றும் உலக பாரம்பரிய சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் இணைந்து நடத்தும் 35 வது மாநில சிலம்பப் போட்டிகள் நேற்று நடைபெற்றது. இப்போட்டிக்கு மாநில அளவில் இருந்து 21 மாவட்டங்களில் 1000 மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்போட்டிக்கு உலக பாரம்பரிய சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் மாவட்ட செயலாளர் செந்தில் குமார் வரவேற்புரை வழங்கினார்.





தாய் சென்சாய் ராஜசேகரன் ஜப்பான் மற்றும் உலக பாரம்பரிய சிலம்பம் விளையாட்டு கலைச்சங்கம் டெக்னிக்கல் டைரக்டர் ஷேக் இப்ராஹிம் சா தலைமையிலும் ,சிவம் மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனர் ரென்சி பரமசிவம் மற்றும், தமிழ்நாடு பாரம்பரிய சிலம்ப விளையாட்டு கலைச்சங்கம் தலைவர் அருண்பிரகாசம் மற்றும் நேரு யுகேந்திரா ஒருங்கிணைப்பாளர் பிரவீன் குமார், முன்னாள் ஒருங்கிணைப்பாளர் ஜவகர் முன்னிலையிலும் சிவகங்கை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கலை கதிரவன் மற்றும் பிரான்சிஸ் சேவியர் , மாவட்ட விளையாட்டு அலுவலர் ரமேஷ் கண்ணன் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துரை வணங்கி போட்டியினை துவக்கி வைத்துள்ளார்கள். மேலும் சிவகங்கை சிவம் மார்ஷல் ஆர்ட்ஸ் தலைவர் சென்சாய் கோபி நன்றியுரை வழங்கினார். மற்றும் இப் போட்டியில் கலந்து கொண்ட மாணவ மாணவியர்களுக்கு ஒற்றைக்கம்பு பிரிவில் வெற்றி கோப்பைகளும் மற்றும் சான்றிதழ்களும் இரட்டை கம்பு பிரிவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது.

# உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி:

கல்லல் பிப்16

உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக சிவகங்கை மாவட்டம் கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. பள்ளி தலைமையாசிரியர் அழகப்பன் தலைமை தாங்கினார். ஆசிரியை அமுதா வரவேற்புரை வழங்கினார். ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை உள்ள 18 மாணவ மாணவிகள் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றனர். முதுகலை தமிழாசிரியர் கண்ணதாசன் திருக்குறளின் ஏன் வாழ்வியல் நூலாக போற்றப்படுகிறது என்பதை மாணவர்களிடம் எடுத்துக்கூறினார். ஆசிரியர்கள் மோகன்ராசன், பத்மா, மாரிமுத்து போட்டியாளர்களை வாழ்த்தினர். ஏழாம் வகுப்பில் மாணவி பொன்னழகு முதலிடமும், ஐங்கரன் சஞ்சய் இரண்டாமிடமும், விஜயதரணி மூன்றாமிடமும் பிடித்தனர். எட்டாம் வகுப்பில் ராமன் முதலிடமும் ஸ்ரீராம் சஞ்சீவ் இரண்டாம் இடமும் பிடித்தனர். ஒன்பதாம் வகுப்புக்கான போட்டியில் மாணவி திரிஷா முதலிடம் பிடித்தார். ஆசிரியைகள் கற்பகவல்லி மற்றும் விஜயராணி நடுவர்களாக இருந்தனர். வெற்றி பெற்றவர்களை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது. உலகத் திருக்குறள் கூட்டமைப்பு மாவட்ட பொறுப்பாளரும், ஆசிரியருமான மாண பிரபு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.





Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161